| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **3,861** |

**தேர்தல் மாவட்டம் : மட்டக்களப்பு - கல்குடா**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 45,325 |
| ரணில் விக்கிரமசிங்க | 24,782 |
| அரியநேத்திரன் | 10,890 |
| அநுரகுமார திஸநாயக்க | 7,504 |
| நாமல் ராஜபக்ஷ | 165 |
| பதியப்பட்ட வாக்குகள் | **131,380** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **94,798** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,360** |

**தேர்தல் மாவட்டம் : மட்டக்களப்பு- பட்டிருப்பு**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 26,512 |
| ரணில் விக்கிரமசிங்க | 18,845 |
| அரியநேத்திரன் | 12,356 |
| அநுரகுமார திஸநாயக்க | 4,681 |
| நாமல் ராஜபக்ஷ | 128 |
| பதியப்பட்ட வாக்குகள் | **101,958** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **68,188** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,420** |

**தேர்தல் மாவட்டம் : திருகோணமலை - திருமலை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 31,371 |
| ரணில் விக்கிரமசிங்க | 15,403 |
| அநுரகுமார திஸநாயக்க | 12,976 |
| அரியநேத்திரன் | 11,300 |
| நாமல் ராஜபக்ஷ | 466 |
| பதியப்பட்ட வாக்குகள் | **101,481** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **76,427** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,508** |

**தேர்தல் மாவட்டம் : திருகோணமலை - சேருவில**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 26,527 |
| அநுரகுமார திஸநாயக்க | 22,724 |
| ரணில் விக்கிரமசிங்க | 8,603 |
| அரியநேத்திரன் | 2,412 |
| நாமல் ராஜபக்ஷ | 1,283 |
| பதியப்பட்ட வாக்குகள் | **80,269** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **65,576** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,548** |

**தேர்தல் மாவட்டம் : திருகோணமலை - மூதூர்**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 58,153 |
| ரணில் விக்கிரமசிங்க | 12,860 |
| அநுரகுமார திஸநாயக்க | 8,706 |
| அரியநேத்திரன் | 4,381 |
| நாமல் ராஜபக்ஷ | 305 |
| பதியப்பட்ட வாக்குகள் | **119,211** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **88,499** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,679** |

**தேர்தல் மாவட்டம் : திகாமடுல்ல -பொத்துவில்**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 70,942 |
| ரணில் விக்கிரமசிங்க | 30,263 |
| அநுரகுமார திஸநாயக்க | 18,053 |
| அரியநேத்திரன் | 4,802 |
| நாமல் ராஜபக்ஷ | 1,397 |
| பதியப்பட்ட வாக்குகள் | **178,557** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **130,430** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **2,057** |

**தேர்தல் மாவட்டம் : திகாமடுல்ல - கல்முனை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 26,873 |
| ரணில் விக்கிரமசிங்க | 15,686 |
| அநுரகுமார திஸநாயக்க | 10,937 |
| அரியநேத்திரன் | 2,623 |
| நாமல் ராஜபக்ஷ | 93 |
| பதியப்பட்ட வாக்குகள் | **80,368** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **58,150** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **950** |

**தேர்தல் மாவட்டம் : திகாமடுல்ல - சம்மாந்துறை**

| | |
|---|---|
| சஜித் பிரேமதாஸ | 41,791 |
| ரணில் விக்கிரமசிங்க | 15,344 |
| அநுரகுமார திஸநாயக்க | 2,569 |
| அரியநேத்திரன் | 2,299 |
| நாமல் ராஜபக்ஷ | 132 |
| பதியப்பட்ட வாக்குகள் | **97,118** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **70,567** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,103** |

**தேர்தல் மாவட்டம் : திகாமடுல்ல - அம்பாறை**

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 60,292 |
| சஜித் பிரேமதாஸ | 53,410 |
| ரணில் விக்கிரமசிங்க | 18,577 |
| நாமல் ராஜபக்ஷ | 5,630 |
| அரியநேத்திரன் | 28 |
| பதியப்பட்ட வாக்குகள் | **172,611** |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | **144,256** |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | **1,962** |

## வெறிச்சோடியது கல்முனை



கல்முனை, செப். 23

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில் நாடளாவிய ரீதியில் நேற்று நண்பகல் வரை பிறப்பிக்கப் பட்ட ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த நிலையில் கல்முனை மாநகரம் வெடிச்சோடிக் காணப் பட்டது. (எ)

# வரலாற்றில் மிகக்குறைந்த முறைப்பாடுகள் பதிவாகின

## பவ்ரல் அமைப்பின் அம்பாறை இணைப்பாளர்

**திருக்கோவில், செப். 23**

**அம்பாறை மாவட்ட தேர்தல் வரலாற்றில் மிகவும் குறைந்த 12 முறைப்பாடுகள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்துள்ளன என்று பவ்ரல் அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தி யநாதன் தெரிவித்தார்.**



அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக தமிழர் பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு வீதம் காலை யில் குறைவாக காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

அதேவேளை ஏனைய முஸ்லிம் சிங்கள பகுதிகளில் காலையிலேயே கூடுதலான மக்கள் வாக்களித்ததை காண முடிந்தது- என்றார்.

பவ்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் காலை யில் சேவைக்குடியிருப்பு பவ்ரல் சேவோ தலைமையகத் தில் போதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு ஆரம்ப மாகின.

அதேவேளை, பெரிய நீலாவணையில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளரின் பிரசுரங்கள் விநியோகம் இடம்பெற்றதை நேரடியாக காணக்கூடியதாக இருந்தது. அதனை சென்று தடுத்திருந்தோம்.

அதேவேளை எமது குழுவினர் திருக்கோவில் பிரதே சத்துக்கு சென்ற பொழுது அங்கே தேர்தல் பிரசார சுவ ரொட்டிகள் அகற்றப்படாமல் இருந்ததை அங்கே அவ தானிக்க முடிந்தது.

எமது பவ்ரல் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் சகல பகுதிக ளிலும் சென்று தேர்தலை மிகவும் உன்னிப்பாக அவதா னித்து வந்தனர் என்றும் சத்தியநாதன் தெரிவித்தார். (எ)

# ஜனாதிபதித் தேர்தல் செய்தி சேகரித்த சுயாதீன ஊடகவியலாளர்மீது தாக்குதல்

மருதமுனை, செப். 23

ஜனாதிபதித் தேர்தல் தொடர் பான ஊடகக் கடமைகளில் ஈடுபட்டிருந்த சுயாதீன ஊடக வியலாளர் தாக்கப்பட்டுள்ளது டன் அவரது மோட்டார் சைக் கிளும் அடித்து நொறுக்கப்பட் டுள்ளது.

குறித்த சம்பவம் அம்பாறை, கல்முனை தேர்தல் தொகுதியில் உள்ள மருதமுனை பொது நூ லக முன்றலில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

மருதமுனையைச் சேர்ந்த ஊடகவியலாளர் அப்துல் வாஹிட் முகம்மது ஜெலீல் என்பவரே தாக்குதலில் காயம டைந்த நிலையில் கல்முனை ஆதார மருத்துமனையில் சேர்க் கப்பட்டுள்ளார்.

இந்த தாக்குதல் தொடர்பில் கல்முனை பிராந்திய மனித உரி மைகள் ஆணைக்குழு அம்பாறை மாவட்ட தெரி வத்தாட்சி அதிகாரி உள்ளிட் டதரப்பினர்களுக்கு அறிவிக் கப்பட்டுள்ளதுடன் உரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படு கிறது.

மேலும் தாக்கப்பட்ட ஊட கவியலாளர் பெரிய நீலா வணை பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளார்.

அத்தடன் ஊடகவியலாள ரின் கால் பகுதியில் கூரிய ஆயு தங்களால் தாக்கப்பட்டுள்ளது டன் அவரது மோட்டார் சைக் கிளும் உடைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து பெரிய நீலாவணை பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவிலுள்ள பாடசாலைமீது இஸ்ரேல் படையினர் தாக்குதல்

## 22 பேர் உயிரிழப்பு, 30 பேர் படுகாயம்



காஸா, செப். 23

**காஸாவில் உள்ள பாடசாலை வளாகத்தின் மீது இஸ்ரேல் படையினர் நடத்திய கொடூரத் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்ததாகவும் 30 பேர் படுகாயமடைந்ததாகவும் காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

காஸா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸாமுனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து ஹமாஸ் அமைப்பினர் மீது போர் அறிவித்த இஸ்ரேல் ஒப்பந்த அடிப்படையில் பணயக் கைதிகள் 105 பேரை மீட்டது. மேலும், அதிரடி மீட்பு நடவடிக்கை மூலம் பணயக் கைதிகள் 8 பேரை இஸ்ரேல் மீட்டுள்ளது.

இதனிடையே காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் சுமார் 41 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இந்த நிலையில், காஸாவில் உள்ள செய்டவுன் என்ற பகுதியில் உள்ள பாடசாலைகூடம் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 22 பேர் உயிரிழந்ததாக காஸா சுகாதாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த தாக்குதலில் 30 பேர் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிக்கையில், ஒரு பழைய பாடசாலை வளாகத்துக்குள் செயல்பட்டு வந்த ஹமாஸ் அமைப்பினரின் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ட்ரம்புடன் விவாதம் நடத்த முயற்சிக்கின்றார் கமலா

வாஷிங்டன், செப். 23

ட்ரம்புடன் மீண்டும் விவாதம் நடத்த விரும்புகிறேன் என்று ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸ் தெரிவித்தார்.

அமெரிக்காவில் நவம்வர் மாதம் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸும் போட்டியிடுகின்றனர். இவர்கள் இருவருக்கும் இடையேயான முதல் நேரடி விவாதம் கடந்த 10ஆம் திகதி நடந்தது.

பல்வேறு விவகாரங்களில் இருவருக்கும் இடையில் அனல் பறக்கும் விவாதம் நடந்தது. இந்த விவாதத்தில் ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் சிறப்பாக செயல்பட்டதாக கருத்து கணிப்புகள் தெரிவித்தன. இதனையடுத்து மீண்டும் விவாதம் நடத்த ட்ரம்புக்கு கமலா ஹாரிஸ் அழைப்பு விடுத்தார். ஆனால், இனி விவாதத்தில் பங்கேற்க மாட்டேன் என ட்ரம்ப் திட்டவட்டமாக கூறிவிட்டார்.

இந்த நிலையில் மிச்சிகனில் நடைபெற்ற பிரசார கூட்டத்தில் உரையாற்றிய கமலா ஹாரிஸ், ட்ரம்புடன் மீண்டும் விவாதம் நடத்த விரும்புகிறேன். அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறேன்- என கூறினார். (எ)

# ரெலிகிராமிற்கு உக்ரைன் தடை

கீவ், செப். 23

அரசுக்கு சொந்தமான சாதனங்களில் ரெலிகிராம் செயலி பயன்படுத்தப்படுவதை உக்ரைன் தடை செய்துள்ளது.

அரசு மற்றும் இராணுவப் பணியாளர்கள், பாதுகாப்புத் துறை மற்றும் முக்கியமான உட்கட்டமைப்பு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரபூர்வ சாதனங்களில் ரெலிகிராம் செய்தி தளத்தைப் பயன்படுத்துவதை உக்ரைன் அரசு தடை செய்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான சைபர் தாக்குதலுக்கு காரணமாக இருப்பதாக ரெலிகிராம் செயலி மீது குற்றம்சாட்டப்பட்டது. இதன் மூலம் பயனர்களின் இரகசிய தகவல்களை எதிரி நாடுகள் திருடுவதாகவும் உக்ரைன் இராணுவ புலனாய்வு துறை கூறியது.

எனவே, அரசாங்கத்துக்குச் சொந்தமான கணினிகள், கையடக்க தொலைபேசிகள் போன்ற சாதனங்களில் ரெலிகிராம் செயலியை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. (எ)

# இஸ்ரேலின் வான்வழி தாக்குதலில் ஹிஸ்புல்லா முக்கிய தளபதி பலி!

பெய்ரூட், செப்.23

லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதி இப்ராஹிம் அகில் கொல்லப்பட்டார். அமெரிக்காவும் இவரைத் தீவிரமாக தேடி வந்த நிலையில், அவரது இழப்பு ஹிஸ்புல்லாவுக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பினரைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 14 பேர் உயிரிழந்தனர். மேலும் 66 பேர் படுகாயமடைந்தனர். உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதி இப்ராஹிம் அகிலும் கொல்லப்பட்டார்.

இப்ராஹிம் அகில் உயிரிழந்ததை இஸ்ரேலும் உறுதி செய்தது. இது தொடர்பில் இஸ்ரேலின் பாதுகாப்புத் துறை தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், “உளவுத் துறை தகவலின்படி பெய்ரூட்டில் மேற்கொண்ட வான்வழித் தாக்குதலில் ஹிஸ்புல்லாவின் எலைட் ராட்வான் படையின் முக்கிய தளபதி இப்ராஹிம் அகில் கொல்லப்பட்டார். இவருடன் இந்தப் படையில் உள்ள மேலும் சிலரும் உயிரிழந்தனர்” எனப் பதிவிடப்பட்டுள்ளது. (எ)

# அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் அணு ஆயுத திட்டம் தடுப்பு

வாஷிங்டன், செப். 23

2009ஆம் ஆண்டு ஈரானின் அணு ஆயுத திட்டத்தை இஸ்ரேலின் மொசாட்டும் அமெரிக்காவின் சி. ஐ. ஏ. உளவு அமைப்பும் சைபர் தாக்குதல் மூலம் தடுத்து நிறுத்தியது குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானின் இஸ்பகான் மாகாணம், நடான்சு நகரில் அணு சக்தி தளம் உள்ளது. அங்கு கடந்த 2009ஆம் ஆண்டில் அணு ஆயுதங்களை தயாரிக்கும் முயற்சியில் ஈரான் விஞ்ஞானிகள் வெற்றியை நெருங்கினர். இதைத் தடுக்க அமெரிக்காவின் உளவு அமைப்பான சி. ஐ. ஏவும் இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டும் இரகசியமாக திட்டமிட்டன. இதன்படி இரு நாடுகளின் உளவு அமைப்புகளும் இணைந்து ஸ்டக்ஸ்நெட் என்ற கணினி வைரஸை உருவாக்கின.

சைபர் தாக்குதலை தடுக்கும் வகையில் ஈரானின் நடான்சு அணு சக்தி தளத்தின் கணினிகள், இணைய இணைப்புகளில் இருந்து முற்றிலுமாக துண்டித்து வைக்கப்பட்டிருந்தன. இதனால் இணையம் வழியாக ஸ்டக்ஸ்நெட் வைரஸை நடான்சு அணு தளத்தில் ஊடுருவ செய்ய முடியவில்லை.

ஈரானில் சுமார் 12, 000 கணினிகளை கடந்து கடைசியாக நடான்சு அணு சக்தி தளத்தின் கணினியில் ஸ்டக்ஸ்நெட் வைரஸ் ஊடுருவியது.

சுமார் 12,000 கணினிகளில் அமைதியாக இருந்த ஸ்டக்ஸ்நெட் வைரஸ், நடான்சு அணு சக்திதளத்தில் கணினியில் புகுந்தபோதுவேலையை காட்டத் தொடங்கியது. யுரேனியத்தை செறிவூட்ட பயன்படுத்தும் சீமென்ஸ் நிறுவனத்தின் சென்ட்ரிப்யூஜ் உபகரணங்கள் தப்பும் தவறுமாக செயல்பட்டன. சுமார் 5 மாதங்கள் போராட்டத்துக்கு பிறகே ஈரான் பொறியியலாளர்களால், ஸ்டக்ஸ்நெட் வைரஸை கண்டு பிடிக்க முடிந்தது. இதுதான் உலகின் முதல் சைபர் தாக்குதல் ஆகும்.

மொசாட்டின் உளவாளியாக செயல்பட்ட நெதர்லாந்தின் எரிக் மர்மமான முறையில் உயிரிழந்தார். ஈரான் உளவாளிகள் அவரை கொலை செய்ததாக குற்றம்சாட்டப்படுகிறது.

இந்த வைரஸ் தாக்குதலால் ஈரான் விஞ்ஞானிகளுக்கு அணு ஆயுத ஆராய்ச்சியை முதலில் இருந்து தொடங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இந்தத் தகவல்கள் சர்வதேச ரீதியில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளன. (எ)

# 100 உக்ரைன் ட்ரோன்களை இடைமறித்து அழித்த ரஷ்யா

மொஸ்கோ, செப். 23

ஒரே இரவில் 100 உக்ரைன் ட்ரோன்களை இடைமறித்து அழித்ததாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரைன் நாட்டுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கடந்த பல மாதங்களாகவே மோதல் நிலவி வருகிறது. உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இதன்படி பிரையன்ஸ்க் பிராந்தியத்தில் 53, கிராஸ்னோடர் பகுதியில் 18, மற்றும் கலுகா, ட்வெர் மற்றும் பெல்கோரோட், ஸ்மோலென்ஸ்க் மற்றும் குர்ஸ்க் பிராந்தியங்கள் மற்றும் அசோவ் கடலுக்கு அருகில் பல டிரோன்கள் அழிக்கப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே கிராஸ்னோடர் பிராந்தியத்தின் டிகோரெட்ஸ்க் மாவட்டத்தில், இரண்டு ட்ரோன்கள் விழுந்ததால் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக சுமார் 1,200 பேர் வெளியேற்றப்பட்டதாக பிராந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சூழலில், உக்ரைனிய எரிசக்தி வசதிகள், ட்ரோன் தயாரிப்புப் பட்டறைகள் மற்றும் பணியாளர்கள், ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களின் இருப்பிடங்கள் மீது ரஷ்ய படைகள், உயர் துல்லியமான ஆயுதங்கள் மற்றும் ட்ரோன்கள் மூலம் ஒரு குழு தாக்குதலை நடத்தியதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

# இணைந்து பணியாற்றுவோம் இந்திய பிரதமர் மோடி உறுதி

வாஷிங்டன், செப். 23

தொடர்ந்து இணைந்து பணியாற்றுவோம் என்று குவாட் உச்சி மாநாடு குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட குவாட் அமைப்பின் உச்சி மாநாடு உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளுக்காக மூன்று நாட்கள் அரசுமுறை பயணமாக பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு சென்றுள்ளார்.

இதனைத்தொடர்ந்து அமெரிக்காவின் விலிமிங்டன் நகரில் குவாட் உச்சி மாநாடு நடைபெற்றது.

இந்த நிலையில் குவாட் உச்சி மாநாட்டில் தலைவர்களை சந்தித்ததில் மகிழ்ச்சி என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் தனது எக்ஸ் வலைத்தளத்தில், “உலகளாவிய நலனுக்காக குவாட் எவ்வாறு தொடர்ந்து பணியாற்ற முடியும் என்பதில் கவனம் செலுத்தும் விவாதங்கள் பயனுள்ளதாக இருந்தன என்று மோடி பதிவிட்டிருந்தார்.

மற்றொரு பதிவில், 297 விலைமதிப்பற்ற பழங்காலப் பொருட்களை இந்தியாவுக்குத் திருப்பித் தருவதை உறுதி செய்ததற்காக ஜனாதிபதி ஜோ பைடனுக்கும், அமெரிக்க அரசாங்கத்துக்கும் நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்“ என்று பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாள் போட்டி தொடர் வெற்றி: ஆப்கானிஸ்தான் அணி சாதனை

ஷார்ஜா, செப். 23



தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 177 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி தொடரை வென்று சாதனை படைத்தது.

ஷார்ஜாவில் நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 311 ஓட்டங்கள் குவித்தது. தனது 7ஆவது சதத்தை விளாசிய ரஹ்மனுல்லா குர்பாஸ் 110 பந்துகளில், 3 சிக்ஸர்கள், 10 பௌண்ட்ரிகளுடன் 105 ஓட்டங்கள் சேர்த்தார். அஸ்மதுல்லா ஓமர்ஸாய் 50 பந்துகளில், 6 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 86 ஓட்டங்களும், ரஹ்மத் ஷா 66 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 50 ஓட்டங்களும் சேர்த்தனர்.

312 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியானது ஆப்கானிஸ்தானின் சுழற்பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 34. 2 ஓவர்களில் 134 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக தெம்பா பவுமா 38 ஓட்டங்கள் எடுத்தார். ஆப்கானிஸ்தான் அணி தரப்பில் ரஷித் கான் 5 விக்கெட்களையும் நங்கேயாலியா கரோதே 4 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இந்த நிலையில் 177 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரை 2 - 0 என கைப்பற்றியது. முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக முதன் முறையாக இரு தரப்பு ஒரு நாள் போட்டித் தொடரில் விளையாடிய நிலையில் ஆப்கானிஸ்தான் அணி தொடரை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. மேலும், ஐ. சி. சி. தரவரிசையில் முதல் 5 இடங்களுக்குள் உள்ள அணிக்கு எதிராக ஆப்கானிஸ்தான் அணி தொடரை வெல்வது இதுவே முதன் முறையாகும்.

(எ)



# 2ஆவது போட்டியிலும் ஆஸி அசத்தல் வெற்றி

## இங்கிலாந்து சொதப்பல்

லண்டன், செப். 23

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்திரேலியா அசத்தல் வெற்றி பெற்றது.

லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற 2ஆவது ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணியை அவுஸ்திரேலிய அணி 68 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 2 - 0 என்று முன்னிலை பெற்றது.

இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 44. 4 ஓவர்களில் 270 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்த நிலையில் இலக்கை விரட்டிய இங்கிலாந்து அணி 40. 2 ஓவர்களில் 202 ஓட்டங்களுக்கு சுருண்டது. ஆஸி அணி சார்பில் மிட்செல் ஸ்டார்க் 3 விக்கெட்களையும் ஹேசில்வுட், ஹார்டி, கிளென் மெக்ஸ்வெல் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

மிட்செல் ஸ்டார்க் எடுத்த 3 விக்கெட்களில் இங்கிலாந்து அணித்தலைவர் ஹாரி புரூக்கிற்கு வீசிய ஜோர்க்கர் அற்புதமாகயிருந்தது. இங்கிலாந்து சார்பில் பில் சால்ட் (12), வில் ஜாக்ஸ் (0), ஹாரி புரூக் (4), பென் டக்கெட் (32), லியாம் லிவிங்ஸ்டன் (0) ஆகியோர் விக்கெட்களை இழந்து 10 ஓவர்களில் 65 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தட்டுத்தடுமாறியது.

இந்த நிலையில்

ஜேமி ஸ்மித், பெத்தெல் சேர்ந்து அணியின் சரிவை தடுத்து நிறுத்தி 55 ஓட்டங்களைச் சேர்த்தனர்.

இவர்களுக்குப் பிறகு பிரைடன் கார்ஸ் 26 ஓட்டங்களையும் ஆதில் ரஷீத் 27 ஓட்டங்களையும் எடுத்தனர். கடைசியாக ஆலி ஸ்டோன் விக்கெட்டை ஸ்டார்க் வீழ்த்த இங்கிலாந்து கிட்டத்தட்ட 10 ஓவர்கள் மீதம் வைத்து 202 ஓட்டங்களுக்குச் சுருண்டு படுதோல்வி கண்டது. ஆஸி தரப்பில் ட்ராவிஸ் ஹெட்டை 29 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மேத்யூ ஷார்ட் 29 ஓட்டங்களுக்கு வெளியேறினார்.

கிளென் மெக்ஸ்வெல்லை 7 ஓட்டங்களில் வீழ்த்திய ஆதில் ரஷீத் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் 200ஆவது விக்கெட்டை வீழ்த்தினார்.

ஆஸி அணித்தலைவர் மிட்செல் மார்ஷ் 59 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள் 3 சிக்ஸர்களுடன் 60 ஓட்டங்களையும் அலெக்ஸ் ஹரி 67 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள் 3 சிக்ஸர்களுடன் 74 ஓட்டங்களையும் விளாச அவுஸ்திரேலியா 270 ஓட்டங்களை எட்டியது, ஆனால், 44. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்தது. இங்கிலாந்து சார்பில் பிரைடன் கார்ஸ் 3 விக்கெட்களை வீழ்த்தினாலும் 75 ஓட்டங்களை வாரி வழங்கினார். பாட்ஸ், ரஷீத், பெத்தெல் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

அலெக்ஸ் ஹரியின் இன்னிங்ஸ் இல்லையென்றால் அவுஸ்திரேலியா இந்தப்போட்டியில் தோற்றிருக்கும் வாய்ப்பும் அதிகம். அதனால்தான் அலெக்ஸ் ஹரி இன்னிங்ஸின் முக்கியத்துவம் அறிந்து அவருக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது. (எ)

# அஸ்வின் அபார பந்துவீச்சு: இந்திய அணி இலகுவெற்றி

சென்னை, செப். 23

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் 6 விக்கெட்கள் வீழ்த்தி அசத்தினார்.

இந்தியா - பங்களாதேஷ் இடையிலான டெஸ்ட் போட்டி சென்னையில் நடைபெற்றது. இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 376 ஓட்டங்கள் குவித்தது.

இந்தியா தரப்பில் அஸ்வின் 113 ஓட்டங்கள் எடுத்தார். தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் 149 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்தியா தரப்பில் பும்ரா 4 விக்கெட்களை வீழ்த்தினார்.

இதையடுத்து 227 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா 4 விக்கெட்கள் இழந்து 287 ஓட்டங்கள் எடுத்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது. இந்தியா தரப்பில் சுப்மன் கில் 119 ஓட்டங்களையும் (ஆட்டமிழக்காமல்), ரிஷப் பண்ட் 109 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இதையடுத்து 515 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய பங்களாதேஷ் அணி 62.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 234 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் இந்திய அணி 280 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்தியா தரப்பில் ரவிச்சந்திரன் அஸ்வின் 6 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என இந்தியா முன்னிலையில் உள்ளது. (எ)





# இலங்கையை பின்தள்ளியது ஆஸி

லண்டன், செ. 23

இலங்கை அணியை பின்னுக்கு தள்ளிய அவுஸ்திரேலியா இரண்டாம் இடத்தையும் தனதாக்கியது.

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒரு நாள் போட்டியிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

இந்த வெற்றி மூலம் அவுஸ்திரேலியா சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளது.

அதாவது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக அதிக வெற்றிகள் பெற்ற அணிகள் பட்டிய லில் இலங்கையை (13 வெற்றி) பின்னுக்குத் தள்ளி அவுஸ்திரேலியா (14 வெற்றி) 2ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. இந்த பட்டியலில் முதல் இடத்திலும் 21 வெற்றிகளுடன் அவுஸ்திரேலியா அணியே உள்ளது.

ஒரு நாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக அதிக வெற்றிகள் பெற்ற அணிகள் விவரம்:

அவுஸ்திரேலியா - 21 (ஜனவரி 2003 - மே 2003)

அவுஸ்திரேலியா - 14 (ஒக்ரோபர் 2023 - செப்ரெம்பர் 2024)

இலங்கை - 13 (ஜூன் 2023 - ஒக்ரோபர் 2023)

தென்னாபிரிக்கா - 12 (பெப்ரவரி 2005 - ஒக்ரோபர் 2005)

பாகிஸ்தான் - 12 (நவம்பர் 2007 - ஜூன் 2008)

தென்னாபிரிக்கா - 12 (செப்ரெம்பர் 2016 - பெப்ரவரி 2017)- என்று ஐ. சி. சி. அறிவித்துள்ளது. (எ)

# மும்முனை ரி - 20 தொடரில் இலங்கைக்கு முதல் வெற்றி

பிறிஸ்பேன், செப். 23

ஆஸியில் நடைபெற்று வரும் மகளிர் ரி - 20 மும்முனை கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்துக்கு எதிராக இலங்கை அணி 69 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவின் பிறிஸ்பேன், ஓவல் விளையாட்டரங்கில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான 19 வயதுக்குட்பட்ட மகளிர் ரி - 20 மும்முனை கிரிக்கெட் போட்டியிலேயே இலங்கை வெற்றிபெற்றது.

ரஷ்மிக்கா செவ்வந்தியின் அதிரடி துடுப்பாட்டத்துடன் கூடிய சகலதுறை ஆட்டம் இலங்கையின் வெற்றியில் பிரதான பங்காற்றியது.

இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த 19 வயதுக்குட்பட்ட இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய ரஷ்மிக்கா செவ்வந்தி 19 பந்துகளை எதிர்கொண்டு 2 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களைக் குவித்து அணியை பலப்படுத்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 17. 3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 79 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



## உத்தியோகபூர்வ...

அதிகாரத்தை சுமூகமாக கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி செயலாளருக்கு ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்தும் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட கோவைகள் அகற்றப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. (அ)

## பொதுக்...

அவருக்குக் கிடைத்த 2 இலட்சத்து 25 ஆயிரம் வாக்குகள் என்பதை வெற்றியின் முதற்படியாகவே கருதுகிறோம்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலிலும் இந்தப் பொதுக் கட்டமைப்பின் ஊடாகவே நாம் தேர்தலை சந்திப்போம். இது மக்களின் ஒரு திரட்சியான வெளிப்பாடாக இருக்கும் என்பதோடு ஒற்றுமையை விரும்பாத கட்சிகளை மக்கள் புறக்கணிப்பார்கள் என்பதையும் பாராளுமன்றத் தேர்தல் வெளிப்படுத்தும் - என்றார். (ஐ)

# அநுரகுமாரவுக்கு இந்திய தூதர் நேரில் வாழ்த்து!

கொழும்பு,செப்.24

ஷநாட்டின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திஸநாயக்கவை இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பத்தரமுல்லையிலுள்ள பணிமனையில் நேற்றைய தினம் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது, இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, இந்தியத் தலைமைத்துவத்தின் நல்வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், மக்களின் ஆணையை வென்றமைக்காக பாராட்டுகளையும் தெரிவித்தார்.

அத்துடன், பல நாகரிக ஒற்றுமைகளை கொண்டுள்ள இரட்டையராகவும் நமது இரு நாடுகளினதும் மக்களது செழுமைக்காக உறவுகளை மேலும் வலுவாக்க உறுதிபூண்டுள்ளது - என்றும் அநுரவிடம் தெரிவித்தார். (ஐ)

## ஜனாதிபதி...

பலப்படுத்தவும் - நெருக்கடியிலிருந்து மீட்பதற்கும் அவருக்கு பலம் இருப்பதாக நான் நம்புகிறேன்.

"தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை முன்னேற்றுவதற்கு ஆதரவை வழங்குவது அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களின் கடமையாகும்" - இவ்வாறு நேற்று தேர்தல் பணிமனையில் நடந்த கூட்டத்தில் சஜித் தெரிவித்திருந்தார்.

## அரியநேத்திர...

தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்னை தீர்வை முன்னிறுத்தியும் - சர்வதேச கவனத்தை ஈர்க்கவும் - தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தியும் தமிழ்ப் பொது வேட்பாளரை தமிழ் பொது அமைப்புகளும் - 7 தமிழ்த் தேசிய கட்சிகளும் இணைந்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு என்ற அமைப்பின் ஊடாக களமிறக்கின.

நேற்று வெளியான ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் 2 இலட்சத்து 26 ஆயிரத்து 343 வாக்குகளை பெற்றார். இது மொத்த வாக்குகளில் 1.7 சதவீதமாகும்.

தமிழ்ப் பொது வேட்பாளர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 688 வாக்குகளையும் மட்டக்களப்பில் 36 ஆயிரத்து 905 வாக்குகளையும் வன்னியில் 36 ஆயிரத்து 377 வாக்குகளையும் திருகோணமலையில் 18 ஆயிரத்து 524 வாக்குகளையும் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் 9 ஆயிரத்து 985 வாக்குகளையும் பெற்றார்.

வடக்கு, கிழக்கு தவிர கொழும்பு மாவட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு 3 ஆயிரத்து 168 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. ஏனைய மாவட்டங்களில் 4 ஆயிரத்து 926 வாக்குகளை தமிழ்ப் பொது வேட்பாளர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இந்த...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "பல நூற்றாண்டு காலமாக நாங்கள் கண்ட கனவே இறுதியில் நனவாகிக் கொண்டிருக்கிறது.

இந்த கனவை நனவாக்குவதற்காக பல சிரமங்களுக்கு மத்தியில் இலட்சக்கணக்கான நீங்கள் அனைவரும் கடந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சி பலனளித்துள்ளது. அதற்காக என்னால் உங்களுக்கு நன்றி கூற முடியாது. அதற்கான காரணம் அது என்னுடையதல்ல, எமது கூட்டுமுயற்சியின் பெறு பேறாகும். இது எம்மனைவரதும் வெற்றியாகும்.

"இலங்கையின் வரலாற்றை புதிதாக எழுதவேண்டுமென எமக்கு அழைப்பு விடுக்கின்றன. கனவை முழுமையாகவே யதார்த்தபூர்வமானதாக அமைத்துக் கொள்வதற்காக இந்த மண்ணுக்கு புத்தம்புதிய ஆரம்பமொன்று அவசியமாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம்களாகிய எம்மனைவரதும் ஒன்றுசேர்ந்த வலிமை ஆரம்பிக்கின்ற யுகத்தின் அடிக்கல்லாக அமையும். அதன்மீதுதான் புதிய மறுமலர்ச்சி யுகம் கட்டியெழுப்பப்படும். வாருங்கள் நாங்கள் அதற்காக கைகோத்துக்கொள்வோம்", என்றுள்ளது. (ஐ)

## சொந்த...

பாரிய வெற்றியீட்டியுள்ளார்.

அவர் 34,320 வாக்குகளைப் பெற்று 53.43 வீத வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ள சஜித் பிரேமதாச 16,820 வாக்குகளையும், ரணில் விக்கிரமசிங்க 5,460 வாக்குகளுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளனர்.

வெறுமனே 5385 வாக்குகளுடன் நாமல் தனது சொந்தத் தேர்தல் தொகுதியில் நான்காவது இடத்தைப் பிடித்து படுதோல்வியடைந்துள்ளார். (அ)

## 9ஆவது ஜனாதிபதியாக...

இந்த வெற்றியானது இலங்கை அரசியல் வரலாற்றில் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் மாற்றம் அல்லது திருப்பு முனையாகக் கருதப்படுகின்றது.

நாட்டின் 9ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்தத் தேர்தலில் வாக்களிக்க ஒரு கோடியே 71 இலட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றிருந்தனர். ஒரு கோடியே 36 இலட்சத்து 19 ஆயிரத்து 916 (79.46 வீதம்) பேர் வாக்களித்திருந்தனர்.

இதில், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் திசைகாட்டி சின்னத்தில் போட்டியிட்ட அநுரகுமார திஸநாயக்க 56 இலட்சத்து 34 ஆயிரத்து 915 (42.31 சதவீதம்) வாக்குகளை பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக் கிய மக்கள் சக்தியின் சஜித் பிரேமதாஸ 43 இலட்சத்து 63 ஆயிரத்து 35 (32.76 சதவீதம்) வாக்குகளையும் ரணில் விக்கிரமசிங்க 22 இலட்சத்து 99 ஆயிரத்து 767 (17.27 சதவீதம்) வாக்குகளையும் நாமல் ராஜபக்ஷ 3 இலட்சத்து 42 ஆயிரத்து 781 (2.57 சதவீதம்) வாக்குகளையும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் 2 இலட்சத்து 26 ஆயிரத்து 343 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

எந்தவொரு வேட்பாளரும் 50சதவீத வாக்குகளை எட்டாததால் இரண்டாவது விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டன. இதில், அநுரகுமார திஸநாயக்க ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 264 வாக்குகளையும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 867 வாக்குகளையும் பெற்றனர். இதன்மூலம் ஒட்டுமொத்தமாக அநுரகுமார திஸநாயக்க 57 இலட்சத்து 40 ஆயிரத்து 179 வாக்குகளை பெற்று முதலிடம் வகித்தார். இதன் மூலம் அவர் 55.87 சதவீத வாக்குகளை பெற்று ஜனாதிபதியாகத் தெரிவானார். சஜித் பிரேமதாஸ 45 இலட்சத்து 30 ஆயிரத்து 902 (44.13 சதவீதம்) வாக்குகளையும் பெற்றார்.

### யார் இந்த அநுரகுமார

55 வயதான அநுரகுமார திஸநாயக்க 1968 நவம்பர் 24ஆம் திகதி பிறந்தவர். அநுராதபுரத்தை சேர்ந்த இவரின் தந்தை ஒரு சாதாரண தொழிலாளி. தம்புத்தேகம காமினி மகா வித்தியாலயம், தம்புத்தேகம மத்திய கல்லூரியில் பயின்ற இவர் பௌதிக விஞ்ஞான இளங்கலை பட்டதாரியாவார்.

பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் ஜே. வி. பி. அமைப்பில் இணைந்து செயல்பட்ட இவர் 1987 - 1989 ஜே. வி. பி. கிளர்ச்சியிலும் பங்கேற்றவர். 1987 முதலே தீவிர அரசியல் ஈடுபட்ட அநுரகுமார பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றபோது அச்சுறுத்தல்களால் அங்கிருந்து வெளியேறினார். பின்னர், 1992ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்தில் கல்விகற்றார். 1995ஆம் ஆண்டு பௌதிக விஞ்ஞானத்தில் இளங்கலை பட்டத்தை பெற்றார்.

பல்கலைக்கழக பட்டம் பெற்று வெளியேறிய அதே ஆண்டில் ஜே. வி. பியின் மத்திய செயல்குழு, அரசியல் குழுவுக்கு உள்வாங்கப்பட்ட அநுரகுமார ஜே. வி. பியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவுடன் நெருங்கி செயல்பட்டு வந்தார்.

2000ஆம் ஆண்டு தேர்தலில் ஜே. வி. பியின் தேசியப் பட்டியல் எம். பியாக முதன்முதலாக பாராளுமன்றத்துக்கு தெரிவானார் அநுரகுமார. தொடர்ந்து 2001ஆம் ஆண்டு நடந்த தேர்தலிலும் தேசியப் பட்டியல் எம். பியானார். 2004ஆம் ஆண்டு குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அநுரகுமார சந்திரிகா தலைமையிலான அரசில் அமைச்சராகவும் பதவி வகித்தார். பின்னர், 2005ஆம் ஆண்டு ஜே. வி. பி. அரசாங்கத்திலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து அமைச்சு பதவியை துறந்தார்.

2014ஆம் ஆண்டு ஜே. வி. பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவின் மறைந்தார். இதையடுத்து, புதிய தலைவராக அநுரகுமார தெரிவானார். 2015 - 2018 வரை பாராளுமன்றில் எதிர்க்கட்சியின் தலைமை கொறடாவாக பணியாற்றினார்.

2019ஆம் ஆண்டு தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டணியை உருவாக்கி அதன் தலைவராகவும் தெரிவானார். அந்த ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்த லில் போட்டியிட்ட அவர் 4 இலட்சத்து 18 ஆயிரத்து 553 வாக்குகளை பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்திருந்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார போட்டியிடுவார் என்பதை 2023 ஒகஸ்ட் 29ஆம் திகதி தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கல்குலேட்டர்...

இடையே காணப்பட்ட நெருங்கிய ஒற்றுமையே இந்தளவு பெருந்தொகையான வாக்குகள் கிடைக்கக் காரணம் என்று கூறப்படுகின்றது.

கல்குலேட்டர் சின்னத்துக்கு வன்னி தேர்தல் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 240 வாக்குகளும் மட்டக்களப்பில் 3 ஆயிரத்து 57 வாக்குகளும் திகாமடுல்ல (அம்பாறை) மாவட்டத்தில் ஆயிரத்து 452 வாக்குகளும் திருகோணமலையில் ஆயிரத்து 746 வாக்குகளும் கிடைத்துள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கல்குலேட்டர் சின்னத்துக்கு 15 ஆயிரத்து 569 வாக்குகள் கிடைத்த அதேசமயம் நாடு முழுவதும் 47 ஆயிரத்து 543 வாக்குகள் கிடைத்தன என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. (ஐ)

## பாசமிகு குழந்தையை...

பிரகாரம் இலங்கை அரசின் நல்லிருப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வங்குரோத்து அடைந்து, பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையாக வீழ்ச்சிடைந்திருந்த, மிகவும் கடினமானதொரு சூழ்நிலையில் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன். அந்த சவாலுக்கு முகங்கொடுக்கின்ற அளவிலான ஆத்ம சக்தி பெரும்பாலானோருக்கு இல்லாதிருந்த சந்தர்ப்பத்திலேயே நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

வரலாறு எனக்கு வழங்கிய அந்தப் பொறுப்பினை நான் சிறப்பாக நிறைவேற்றினேன். இரண்டு வருட குறுகிய காலப்பகுதியினுள் என்னால் இந்த நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுக்க முடிந்தது. எனது அரசியல் வாழ்வில் எனது நாட்டுக்காக செய்யக் கிடைத்த பெறுமதியான கடமைப் பொறுப்பு அதுவாகும் என நான் நம்புகிறேன். நான் நாட்டைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் நூற்றுக்கு எழுபது வீதமாகக் காணப்பட்ட பணவீக்கத்தை பூச்சியம் தசம் ஐந்து (0.5%) வரை என்னால் குறைக்க முடிந்தது.

மிகவும் சவால் மிகுந்த தொங்கு பாலத்தில் இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையை நான் முடிந்தளவு அதிகபட்ச தூரம் பாதுகாப்பாகக் கொண்டு வந்தேன். தொங்குபாலத்தின் முடிவிடம் கண்களுக்கு மிகவும் எட்டும் தூரத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்தப் பாசம் மிகுந்த குழந்தையினை அநுரகுமார திஸநாயக்க அவர்களிடம் ஒப்படைப்பதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்துள்ளனர்.

அநுர ஜனாதிபதி அவர்களே, நீங்களும் நானும் அன்பு வைத்துள்ள இலங்கை எனும் பாசம்மிகுந்த குழந்தையை நான் மிகவும் கருணையுடன் உங்களிடம் ஒப்படைக்கிறேன். இந்தக் குழந்தையை நான் கொண்டு வந்தததை விடவும் பாதுகாப்பாக தொங்குபாலத்தின் முடிவிடத்துக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் உங்களுக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட் டாலும், பதவிகளை வகித்தாலும் வகிக்காவிட்டாலும் இந்த நாட்டு மக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை ஏற்புடைய சந்தர்ப்பங்க ளில் எந்த விதமான தயக்கமும் இன்றி நான் நிறைவேற்றுவேன். அத்துடன், எனது ஆட்சி காலத்தினுள் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய, வழங்காத அனைவருக்கும் இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் - என்றார். (ஐ)

## ஜனாதிபதித் தேர்தல் 2024 - மாவட்ட ரீதியான முடிவுகள்

**தேர்தல் மாவட்டம் : கம்பஹா**

| | |
|---|---|
| அநுரகுமார திஸநாயக்க | 809,410 |
| சஜித் பிரேமதாஸ | 349,550 |
| ரணில் விக்கிரமசிங்க | 216,028 |
| நாமல் ராஜபக்ஷ | 41,193 |
| அரியநேத்திரன் | 807 |
| பதியப்பட்ட வாக்குகள் | 1,881,129 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 1,487,770 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 29,381 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## துப்பாக்கியை விட்டுச்சென்ற கான்ஸ்டபிள் பணி நிறுத்தம்!

கொழும்பு, செப். 23

ஜனாதிபதித் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தனது கடமை நேர ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 60 தோட்டாக்களை விட்டுச்சென்ற குற்றத்துக்காக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த கான்ஸ்டபிள், கம்பஹா உடகஹா வல்பொல கல்லூரி வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றும் போது பொறுப்பான அதிகாரிக்கு அறிவிக்காமல் ரி-56 ரகத் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை விட்டுச்சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தனகல்ல உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் பொறுப்பிலுள்ள குறித்த வாக்களிப்பு நிலையத்தில் பணிகளை நிறைவு செய்த பொலிஸ் கான்ஸ்டபிள் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை யாருக்கும் தெரிவிக்காமல் வாக்களிப்பு நிலையத்திலேயே வைத்து விட்டுச் சென்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த முறைகேடான செயல் காரணமாக நேற்று முன் தினம் முதல் அவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவிக்கின்றது. (அ)

## மிகஅமைதியான தேர்தல்!

### பவ்ரல் அமைப்பு பாராட்டு



கொழும்பு, செப். 23

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், இலங்கை வரலாற்றில் மிகவும் அமைதியான தேர்தலாக இடம் பிடிக்குமென சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

தேர்தலின்போது அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தமையும் குறைவு என சுட்டிக்காட்டிய அவர், பொலிஸ் மா அதிபர் நாட்டில் இல்லாதபோதும் தேர்தல்களை நடத்துவதற்கு பொலிஸார் தம்மால் இயன்ற ஆதரவை வழங்கியதாகவும் கூறினார்.

மேலும் இந்த வருட ஜனாதிபதித் தேர்தலில் 75 வீதம் முதல் 80 வீதம் வரையிலான வாக்குகள் பதிவாகியுள்ளதாக பவ்ரல் தெரிவித்துள்ளது. (அ)

## அரச அதிகாரியின் மோ. சைக்கிளை மோதியது தேர்தல் அதிகாரியின் கார்

கொழும்பு, செப். 23

புத்தளம் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் நிலையமொன்றில் கடமையாற்றும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள், கார் ஒன்றுடன் மோதியதில் தேர்தல் அதிகாரி ஒருவரும் அவரது தந்தையும் காயமடைந்துள்ளனர்.

சுரேனி மதுசிகா என்ற பெண் அதிகாரி அவரது தந்தையுடன், புத்தளம் வாக்கு எண்ணும் மையத்தில் தேர்தல் கடமைக்காகச் சென்று கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவத்தில் அவர்கள் படுகாயமடைந்து புத்தளம் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காரை ஓட்டிச் சென்ற அதிகாரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூத்த துணை ஆணையர் என்றும், மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது அவர் மது போதையில் இருந்தமை தெரிய வந்துள்ளது எனவும் கூறப்பட்டது. (அ)

# யாழ். தேர்தல் மாவட்டத்தில் 25,353 வாக்குகள் நிராகரிப்பு!

யாழ்ப்பாணம், செப். 23

**யாழ்.தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளாக 3 இலட்சத்து 97 ஆயிரத்து 41 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் 25 ஆயிரத்து 353 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட பதில் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 3 இலட்சத்து 71 ஆயிரத்து 688 செல்லுபடியான வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில், வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ பிரேமதாச 1 இலட்சத்து 21 ஆயிரத்து 177 வாக்குகளும், பா.அரியநேந்திரன் 1 இலட்சத்து 16 ஆயிரத்து 688 வாக்குகளும், ரணில் விக்கிரமசிங்க 84 ஆயிரத்து 558 வாக்குகளும், அநுரகுமார திஸநாயக்க 27 ஆயிரத்து 086 வாக்குகளையும் பெற்றனர்.

அதேவேளை, ஏனைய வேட்பாளர்கள் மொத்தமாக 22 ஆயிரத்து 179 வாக்குகளையும் பெற்றுள்ளனர் - என்றார். (அ)

# நாட்டை விட்டு அவசர அவசரமாக வெளியேறிய சில அரசியல்வாதிகள்

கொழும்பு, செப். 23

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஊடாக பௌத்த பிக்கு ஒருவர் உட்பட பல அரசியல் வாதிகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என விமான நிலையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அதன்படி, முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே நேற்று முன் தினம் மாலை பிற்பகல் 2.25 மணிய எவில் நாட்டிலிருந்து சென்னைக்கு புறப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார நேற்றுமுன்தினம் 11.15 மணியளவில் தாய்லாந்துக்கு பயணமானார்.

இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் நேற்று அதிகாலை 12.50 மணியளவில் ஹொங்கொங்குக்கு புறப்பட்டுச் சென்றார். (அ)

# வன்முறைகள் இல்லாத ஜனாதிபதித் தேர்தல்!

### கண்காணிப்பு குழுக்கள் வரவேற்பு

கொழும்பு, செப். 23

இலங்கையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் அமைதியாகவும், பெரிய வன்முறைச் சம்பவங்களோ, இடையூறுகளோ இன்றியும் நடைபெற்றதாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், தேர்தலை வெற்றிகரமாக முடிக்க உதவிய தேர்தல் ஆணையகம் மற்றும் பாதுகாப்பு தரப்பினரை அவர்கள் பாராட்டியுள்ளனர். சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பின் தகவல்படி, நேற்று முன் தினம் 108 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனினும், அதில் எதுவுமே பாரதூரமானதாக இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த தேர்தல் அமைதியாக நடத்தப்பட்டதாக ஜனநாயக சீர்திருத்தங்கள் மற்றும் தேர்தல் ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய கண்காணிப்பாளர் குழுவின் மக்கள் தொடர்பு மற்றும் ஈடுபாடு அதிகாரி விடுத்துள்ள அறிக்கையில், இலங்கை ஜனாதிபதி தேர்தல் குறித்த விரிவான கண்ணோட்டம் இன்று திங்கட்கிழமை உத்தியோக பூர்வமாக சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்தார். (அ)

## தேர்தலில் மிக அமைதியாக செயல்பட்ட மக்களுக்கு நன்றி



கொழும்பு, செப். 23

தேர்தலின் போது அமைதியான முறையில் செயற்பட்ட மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

ஏனைய தேர்தல்களுடன் ஒப்பிடும்போது இந்த ஜனாதிபதித் தேர்தலில் பாரதூரமான வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாக வில்லை. இது திருப்திகர மாகவுள்ளதென அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலின் இறுதி முடிவுகள் வெளியான பின்னரும் மக்கள் அமைதியாகச் செயற்படுமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ)

## அநுரவுக்கு மனோ வாழ்த்து

கொழும்பு, செப். 23

ஜனாதிபதி தேர்தலில் முன்னிலை வகிக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் மும்மொழியிலும் மனோ எம்.பி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

"மக்களின் ஆணையை பெற்று கொண்டீர்கள், வாழ்த்துக்கள் சஜித் பிரேமதாசவின் வெற்றிக்காக நாம் கடுமையாக பணியாற்றிய மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா மாகாண வாக்காளர்களுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி நன்றியை தெரிவிக்கின்றது.

ஜனநாயக செயல்பாடு மிளிர்ந்துள்ளதுடன் அநுரவின் வெற்றி, பன்மைத்துவம், சமூகநீதி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய புதிய இலங்கைக்கான ஆரம்பம் என நம்புகிறேன்." என அவர் தனது பதிவில் கூறியுள்ளார்.

## தென் மாகாண ஆளுநர் இராஜினாமா

கொழும்பு, செப். 23

தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நேற்று தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

வடமேல் மாகாண ஆளுநராக பதவி வகித்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கடந்த மே மாதம் ஜனாதிபதியினால் தென் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். (அ)



## வெறிச்சோடிய கிண்ணியா

கிண்ணியா, செப். 23

நாடு முழுவதும் நேற்று நண்பகல் 12 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நகரப் பகுதிகளில் பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் கடைகள், வீதிகள் என்பன வெறிச்சோடி காணப்பட்டன. மக்கள் நடமாட்டமும் குறைவாக காணப்பட்டன.

எனினும் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வாங்கும் மரக்கறி கடைகள், இறைச்சி கடைகள், மீன் கடைகள் என்பன திறந்திருந்தன.

இதேவேளை மருந்தகம் முதலான கடைகளும் திறந்து காணப்பட்டன. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org